## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 26.09.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் சூரா ஜுமுஆவின் 10 முதல் 12 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள்.**

அதன் பொருள் : நம்பிக்கை கொண்டவர்களே! வெள்ளிக்கிழமைகளில் தொழுகைக்காக அழைக்கப்பட்டால், நீங்கள் அல்லாஹ்வை நினைவு கூருவதற்கு விரைந்து செல்லுங்கள். (மற்றெல்லா) வியாபாரங்களையும் விட்டு விடுங்கள். நீங்கள் அறிந்திருப்பின் இது உங்களுக்கு மிகச் சிறந்ததாகும்.

தொழுகை நிறைவேற்றப்பட்டதும், பூமியில் பரவிச் சென்று, அல்லாஹ்வின் அருளைத் தேடுங்கள். நீங்கள் வெற்றி பெறுவதற்காக அல்லாஹ்வை மிகுதியாக நினைவு கூருங்கள்.

ஆனால் அவர்கள் வியாபாரத்தையோ, கேளிக்கைகளையோ காணும் போது, அதன்பால் ஈர்க்கப்பட்டு, உம்மை (தனித்து) நிற்க வைத்து விடுகின்றனர். நீர் கூறுவீராக: அல்லாஹ்விடமுள்ளது கேளிக்கையை விடவும், வியாபாரத்தை விடவும் மிகச் சிறந்ததாகும். அல்லாஹ் மிகச் சிறந்த உணவளிப்பவனாவான்.

திருக்குர்ஆனின் சூரா ஜுமுஆவுடைய இறுதி மூன்று வசனங்களின் பொருளை நாம் கேட்டோம். நான் அதனை ஓதினேன்.

ஜுமுஆ தொழுகையின் முக்கியத்துவம் அதிலிருந்து நமக்கு தெரிய வருகிறது. ஏனெனில் அதில் ஜுமுஆ தொழுகைக்கென்று தனிக்கட்டளை உள்ளது.

தொழுகைகள், இபாதத்துகள், தொழுகை அதற்குரிய நேரத்தில் தொழுவது, முறையாக தொழுதல், பள்ளியில் சென்று தொழுதல், தொழுவதற்கு முன் வெளிப்படையாக உளூ செய்து சுத்தமாகுதல் போன்ற விரிவான கட்டளைகள் பற்றி திருக்குர்ஆனில் இருந்தும்கூட ஜுமுஆ தொழுகைக்காக இறைவன் ஒரு தனிக்கட்டளையையே இறக்கியுள்ளான். எனவே ஜுமுஆ தொழுகைக்கு ஒரு குறிப்பான முக்கியத்துவம் உள்ளது. மேலும் தெளிவான விளக்கங்கள் நமக்கு ஹதீஸிலிருந்து கிடைக்கின்றன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வழிகாட்டல்களில் இருந்தும் நமக்கு கிடைக்கின்றன. ரமலானின் முதல் ஜுமுஆவில் துஆவின் பக்கம் கவனமூட்டினேன். அதனைத் தொடர்ந்து ஜுமுஆ நாளில் துஆ கபூல் செய்யப்படக்கூடிய ஒரு சிறப்பான நேரம் ஒன்று இருப்பது பற்றி குறிப்பிட்டேன். அது குறித்து ஹதீஸிலும் காணப்படுகிறது. ஜுமுஆவின் முக்கியத்துவத்தை உணர்ந்து ரமலான் நாளில் பெரும்பாலானவர்கள் குறிப்பாக அதிலிருந்து பயன்பெற முயற்சி செய்கின்றீர்கள் என்று நம்புகிறேன். ஜுமுஆவும், நோன்பும் ஒன்றுசேர்ந்து, நாம் இறை நெருக்கத்தை பெற காரணமாகின்றன. இன்று நாம் அல்லாஹ்வின் அருளால் ரமலானில் கடைசி பத்து நாட்களின் 5-வது நாளை கடந்து கொண்டிருக்கிறோம். இது ரமலானின் கடைசி ஜுமுஆ ஆகும். மற்ற முஸ்லிம்கள் இந்த நாளுக்கு மிகவும் முக்கியத்துவம் தருகின்றனர்.

இது கடைசி ஜுமுஆ ஆகும். எனவே இந்த ஜுமுஆவில் கலந்து கொண்டதனால் நமது எல்லா பாவங்களும் கண்டிப்பாக மன்னிக்கப்பட்டு விடும். நமது முந்தைய கணக்குகள் தீர்க்கப்பட்டு விட்டால், பிறகு புதிதாக நாம் என்ன செய்ய விரும்புகிறோமோ அதனை செய்து கொள்ளலாம் என்று கருதுகின்றனர். மேலும் பல வருடங்களுக்குப் பிறகு இந்த ஒரு ஜுமுஆவை தொழுவதே போதுமானது என்றும் கருதுகின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஒப்புக் கொள்ளாமல் இறை கட்டளைகளை சரியாக புரிந்து கொள்ள இயலாமல் போனதன் விளைவாக அவர்களுக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளது. நம் மீது இறைவன் பேரருள் செய்துள்ளான். நாம் இறை கட்டளைகளைப் புரிந்து ஒவ்வொரு ஜுமுஆவின் முக்கியத்துவத்தையும் உணர்ந்துள்ளோம். அது ரமலானின் ஜுமுஆவாயினும் சரி. மற்ற நாட்களின் ஜுமுஆ

ஆயினும் சரி. ரமலானின் ஜுமுஆவுக்கு நம்மிடத்தில் ஒரு முக்கியத்துவம் இருக்கும் என்றால், அதற்கு காரணம் ஒருபுறம் நமக்கு நற்செய்தி உள்ளது. ஜுமுஆவின் நாளில் ஒரு நேரம் வருகிறது. அதில் அடியான் செய்யும் துஆக்களை இறைவன் ஏற்றுக் கொள்கிறான். ரமலானின் நோன்பு காரணத்தால் இந்த நற்செய்தி கிடைக்கிறது. அல்லாஹ் அடியானின் அருகில் வந்து அவனது துஆக்களை கேட்கிறான். ரமலானின் தஹஜ்ஜுத் மற்றும் இதர நஃபில்கள் மீது குறிப்பாக கவனமூட்டப்பட்டுள்ளது. மக்கள் பொதுவாக கவனம் செலுத்தவும் செய்கின்றனர். ரமலானின் இரவுகளில் ஒரு முக்கியத்துவம் இருப்பதுபோன்று அதன் பகலிலும் இறைவன் ஒரு சிறப்பான அருள் புரிந்தவாறு அடியானின் துஆவை கேட்கிறான். இரவிலும் சிறப்பான அருள்புரிந்து அடியானின் துஆவை கேட்கிறான். எனவே இந்த பகல் இரவுகளிலிருந்து பயனடைந்தவாறு இறைவனது நிரந்தரமான அருளை கேளுங்கள். நிரந்தரமாக அவனது ரஹ்மத்தின் போர்வையில் இருக்கவும், உலகத்தின் நரகத்திலிருந்தும், மறுமையின் நரகத்திலிருந்தும் விலகியிருக்க வாய்ப்பு தருமாறு துஆ கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். அதன் மூலம் இந்த ரமலானின் கடைசி ஜுமுஆ மட்டும் இபாதத்துகளின் பக்கம் கவனமூட்டக்கூடியதாக இருக்காமல் வருடத்தின் ஒவ்வொரு ஜுமுஆவும், ஒவ்வொரு நாளும் இறை திருப்தியைப் பெறுவதன் பக்கம் கவனமூட்டக்கூடியதாக ஆகி விடும். எனவே ஒவ்வொரு அஹ்மதியும் இதிலிருந்து பயன்பெற முயற்சி செய்ய வேண்டும். ரமலானின் ஜுமுஆ மட்டுமல்ல. அல்லது ரமலானின் கடைசி ஜுமுஆ மட்டுமல்ல. கண்டிப்பாக இந்த ஜுமுஆக்களுக்கு மட்டும் கண்டிப்பாக போயே ஆக வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர்.

இந்த ஜுமுஆ கண்டிப்பாக ஈத் மைதானத்தில் சென்றுதான் நடத்த வேண்டும் என்றும், ஈத் தொழுகையின் முக்கியத்துவம் பற்றி திருக்குர்ஆனில் நேரடியாக எந்த கட்டளையும் இல்லை என்றும் சிலர் கூறுகின்றனர்.

ஈத் தொழுகைக்கு எவ்வளவு முக்கியத்துவம் உள்ளது எனில் அதில் பெண்களும் கூட கலந்து கொள்ள வேண்டும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிறப்பாக கவனமூட்டியுள்ளார்கள். தொழ இயலாத பெண்கள்கூட ஈத் தொழுகைக்கு செல்ல வேண்டும் என்ற கட்டளை உள்ளது. ஆனால், ஜுமுஆவைப் பற்றி அத்தகைய கட்டளை எதுவும் இல்லை. நிச்சயமாக பெண்கள் கலந்து கொண்டேயாக வேண்டும் என்றும் கூறப்படவில்லை. இன்னும் சில விஷயங்களையும் கவனிக்க வேண்டும். வருடத்தில் இரு ரக்அத்துகள் தொழுது, சில நிமிடங்கள் குத்பா கேட்பதால் பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடும் என்ற பொருளில் ஈத் தொழுகைக்கு செல்லுமாறு கூறப்படவில்லை. மாறாக இறைவன் முன்பாக தியாகத்தை எடுத்து வைக்கவும், இபாதத் செய்யவும் வாய்ப்பு கிடைத்துள்ளது. அல்லது ஒருவருக்கு கட்டாய சூழ்நிலை காரணத்தால் இறைகட்டளையை முழுமையாக செயல்படுத்த முடியவில்லை. இந்நிலையில் இறைவனது கட்டளை என்னவென்றால், அவனுக்கு நன்றி செலுத்தும் முறையில் இந்த ஈத் உடைய இபாதத்தில் கலந்து கொள்ள வேண்டும். அதன் மூலம் இறைதிருப்தியை பெறுபவர்களாக ஆகலாம். அல்லாஹ்விடம் துஆ கேட்க அதன் மூலம் வாய்ப்பு கிடைக்கும். வருங்காலத்தில் இபாதத்தின் ஒவ்வொரு ஃபர்ளையும் நிறைவேற்ற வாய்ப்பு கிடைக்க இறைவனிடம் வேண்ட வாய்ப்பு கிடைக்கலாம். நஃபில்கள் தொழுவதற்கான வாய்ப்பு கிடைக்கலாம். அப்போதுதான் ஈத் பயனளிக்கும். இதுவே ஒரு மூஃமினின் பெருமைக்கு உகந்ததாகும். அத்தகைய ஈத் கொண்டாட முயற்சி செய்ய வேண்டும். நான் இப்போது ஜுமுஆவின் முக்கியத்துவம் பற்றி கூறி வந்தேன்.

ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஜுமுஆவின் நாளில் நன்மையின் கூலி பல மடங்கு அதிகமாக்கி தரப்படுகிறது.

பிறகு இன்னொரு ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஜுமுஆ நாளில் பள்ளியின் வாசலில் மலக்குகள் நின்று கொண்டு, முதலில் வருபவர்களை முதலில் எழுதுகின்றனர். முதலில் வருகின்ற அம்மனிதர், ஓர் ஒட்டகத்தை குர்பானி கொடுத்தவர் போன்றவராவார்.

இரண்டாவது வருபவர் ஒரு பசுவை குர்பானி கொடுத்தவர் போன்றவராவார். மூன்றாவது வருபவர் ஒரு ஆட்டையும், அதன் பிறகு வருபவர் ஒரு கோழியையும் அதன் பிறகு வருபவர் ஒரு முட்டையை குர்பானி கொடுத்தவரைப் போன்றவராவார். பிறகு இமாம் குத்பா கொடுப்பதற்காக மேடைக்கு வந்து விட்டால் அந்த மலக்குகள் தங்களது ரிஜிஸ்டரை மூடி விட்டு குத்பாவை கேட்பதற்காக அமர்ந்து விடுகின்றனர்.

பிறகு ஒரு அறிவிப்பின் ஒரு பகுதியை மட்டும் விளக்குகிறேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நாள்களில் மிகச் சிறந்த நாளை நான் உங்களுக்கு கூறட்டுமா? அது ஜுமுஆவின் நாளாகும். மாதங்களில் சிறந்த மாதத்தை நான் உங்களுக்கு கூறட்டுமா? அது ரமலான் மாதமாகும். இரவுகளில் சிறந்த இரவு பற்றி நான் உங்களுக்கு கூறட்டுமா? அது லைலத்துல் கத்ர் இரவாகும்.

பிறகு ஒரு ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் லுபாபா பின் முன்தஸிர் அறிவிக்கின்றார்கள்:

நாள்களின் தலைவர் ஜுமுஆ நாள் ஆகும். ஜுமுஆ நாள் அல்லாஹ்விடம் மிகவும் மகத்துவம் பெற்றது. அது அல்லாஹ்வின் பார்வையில் ஈதுல் ஃபித்ர், ஈதுல் அழ்ஹாவைக் காட்டிலும் சிறந்தது. இந்த நாளுக்கு ஐந்து சிறப்பு அம்சங்கள் உள்ளன.

1) இந்த நாளில் அல்லாஹ் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களைப் படைத்தான்.

2) இந்த நாளில் அல்லாஹ் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களை பூமியில் இறக்கினான்.

3) இதே நாளில் அல்லாஹ் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களுக்கு மரணத்தை தந்தான்.

4) இந்த நாளில் ஒரு நேரம் வருகிறது. அந்த நேரத்தில் ஒரு மனிதன் அல்லாஹ்விடம் ஹராமானவற்றைத் தவிர வேறு எதனைக் கேட்டாலும் இறைவன் தருகிறான்.

5) அதே நாளில் கியாமத் வரும். இறை நெருக்கம் பெற்ற மலக்குகள், வானம், பூமி, கடல் இந்நாளைக் கண்டு பயப்படுகின்றனர்.

இந்த எல்லா ஹதீஸ்களும் ஜுமுஆவின் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்துகின்றன.

**இதா நூதியலிஸ்ஸலாத்தி மிய்யவ்மில் ஜுமுஅத்தி ஃபஸ்அவ் இலா திக்ரில்லாஹி வதருல் பைஃ** – ஜுமுஆ நாளில் தொழுகைக்காக அழைக்கப்பட்டால் உங்கள் வியாபாரங்களை விட்டு விட்டு தொழுகைக்காக விரைந்து செல்லுங்கள் என்று அல்லாஹ் கூறியிருப்பது இந்நாளின் சிறப்பான பரக்கத்தின் காரணத்தால் ஆகும். உங்கள் வியாபாரம், கொடுக்கல் வாங்கல் தான் சிறந்தது என்று கருதாதீர்கள். உண்மையான சிறப்பு, செல்வம் உங்களுக்கு ஜுமுஆவின் நாளில இபாதத் செய்வதில்தான் இருக்கிறது.

ஹதீஸில் வருகிறது. நன்மையின் கூலி பன்மடங்கு அதிகமாக்கித் தரப்படுகிறது. முதலில் மனிதன் இறைகட்டளைக்குப் பணிந்து தனது எல்லா அசுத்தங்கள், வியாபாரங்கள், பொருள்களை விட்டு விட்டு இறைகட்டளையை அமல்படுத்த வருகிறான். ஜுமுஆ தொழுகை என்பது பொதுவாக ளுஹர் தொழுகையை சற்று நீட்டி தொழுவது போன்றது. ஒரு குத்பா கொடுக்கப்படுகிறது. தொழிலில் மூழ்கியுள்ள மனிதன், இவ்வளவு நேரம் என்னால் வியாபாரத்தை விட்டு விட்டு இருக்க இயலாது. எனக்கு நஷ்டம் வந்து விடும் என்று வெளிப்படையாக இவ்வாறு கருதுகிறார். ஆனால் இறைவன் கூறுகிறான். எனக்கு கட்டுப்படுவதால் உங்களுக்கு ஒருபோதும் நஷ்டம் வராது.

அல்லாஹ் ஓரிடத்தில் கூறுகின்றான்:

**வமன் யுதியில்லாஹ வரஸூலஹூ வயஹ்ஷல்லாஹ வயத்தக்ஹி ஃப உலாயிக ஹுமுல் ஃபாயிஸூன்** (24:53) – எவர்கள் அல்லாஹ்வுடைய ரஸூலுக்கு கட்டுப்பட்டு, அல்லாஹ்வுக்கு பயந்து, தக்வாவை மேற்கொள்வாரோ அவரே வெற்றி பெறுவார்.

ஆக இறைவன் கூறுகிறான். பொதுவான நிலைகளில் கட்டுப்படுவரே வெற்றி பெறுவார். ஜுமுஆவின் நாளில் இந்த கட்டுப்படுதல் இன்னும் பரக்கத்துகளை கொண்டு வரும். அதன் அளவை நாம் கணக்கிடவே முடியாது.

அல்லாஹ்வுக்கு அஞ்சுபவரே இறைவனை திக்ர் செய்ய முன்வருவார். தக்வாவின் பக்கம் அடியெடுத்து வைப்பார். அவர் வெற்றி பெறாமல் இறைவனால் திரும்ப அழைக்கப்பட மாட்டார். எவர் அல்லாஹ்வுக்காக தனது தொழிலை விட்டு விட்டு வந்தாரோ அவரைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இறையச்சத்தால் இறைவனை திக்ர் செய்வதற்காக வருபவர் பல மடங்கு நன்மையைப் பெறுவார். எனவே இறைவனின் **ஸாலிகும் கைருல்லகும் இன் குன்தும் தஃலமூன்** – நீங்கள் அறிவுடையவர்கள் எனில் இதுவே உங்களுக்கு சிறந்தது என்ற கூற்றின் மூலம் அல்லாஹ் எல்லா ஆற்றல்களின் எஜமானன் என்று ஒரு மூஃமின் கருதுகிறார். இறைவனை **ரப்புல் ஆலமீன்** என்று கருதுகிறார். பிறகு அதில் அவர் தன்னிறைவு பெற வேண்டும்.

இறைவன் கூறுகின்றன். ஜுமுஆவின் நாளில் நான் எவ்வளவு பரக்கத்துகளை வைத்துள்ளேன் என்று உங்களுக்கு தெரியாது. எவ்வளவு பரக்கத்துகளை ஜுமுஆவின் மூலம் பெறுகின்றீர்கள் என்பது தெரிந்தால், ரமலானின் ஜுமுஆக்கள், ரமலானின் கடைசி ஜுமுஆக்கள் மட்டும் போதுமானது என்று கருதமாட்டீர்கள். மாறாக, ஒரு ஜுமுஆவிற்குப் பிறகு இன்னொரு ஜுமுஆவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பீர்கள். பிறகு பள்ளிவாசல் வருவதற்காக துரிதமாக செயல்படுவீர்கள். ஒட்டகத்தை குர்பானி செய்த நன்மையைப் பெறுவதற்காக விரைந்து வருவீர்கள். பசுவைக் குர்பானி செய்த நன்மையைப் பெற விரைந்து வருவீர்கள். குறைந்தது மலக்குகள் பதிவேடுகளை மூடுவதற்கு முன்பாக பதிவேட்டில் நமது பெயர் இடம்பெற வேண்டும் என்பதற்காவது முயற்சி செய்வீர்கள். துஆ ஒப்புக்கொள்ளப்படும் நேரத்தை எதிர்பார்த்து துஆவில் மூழ்கியிருப்பீர்கள். திக்ரே இலாஹி (இறை தியானம்) க்கு முன்னால் உலகில் உள்ள அனைத்துப் பொருள்களையும் உதறி விடுவீர்கள். அஹ்மதிகளாகிய நமது உள்ளத்தில் இதன் முக்கியத்துவம் தெளிவாக உணரப்பட்டிருக்க வேண்டும். பின்னவர்(ஆகரீன்)களை முன்னவர்(அவ்வலீன்)களுடன் இணைப்பதில் இக்காலத்திற்கு மிகவும் பெரும் முக்கியத்துவம் உள்ளது. உலக நேரம் எல்லை கடந்துள்ளது. ஷய்த்தான் நம்மை இறைதிருப்தியை பெற்றுத் தருகிற எல்லா வேலைகளிலிருந்தும் தடுக்க முயற்சி செய்துகொண்டிருக்கிறான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது தோற்றத்துடன் இந்நாளுக்குள்ள தொடர்பை இக்காலத்துடன் இணைத்துக் கூறியுள்ளார்கள். அவர்களை ஏற்றுக் கொள்ளாதவர்களை எச்சரித்துள்ளார்கள். அதே வேளையில் அவர்களை ஏற்றுக் கொண்டவர்களுக்கு அறிவுறுத்துகிறார்கள். இந்த விழாவை அல்லாஹ் நல்லியல்பு கொண்டவர்களுக்காக ஏற்படுத்தியுள்ளான் என்று கருதுகிறேன். இதிலிருந்து பயன் பெறுபவரே நற்பேறுபெற்றவர். என்னோடு தொடர்பு கொண்டுள்ளவர்கள், தாம் எதை பெற வேண்டுமோ அதனை பெற்று விட்டோம் என்று ஒருபோதும் ஏமாந்துவிட வேண்டாம். நீங்கள் மற்றவரை விட நற்பேறு பெற்றவர்கள் என்பது உண்மையே. சிலர் தமது கடும் மறுப்பினால் இறை கோபத்தைத் தூண்டி உள்ளனர். அவர்களை விட நீங்கள் நற்பேறு பெற்றவர்கள். மேலும் இறைவன் மீது நல்லெண்ணம் கொணடு இறை கோபத்திலிருந்து தப்புவதற்காக சிந்தித்து இருக்கிறீர்கள் என்பது உண்மையே. நீங்கள் எந்த நீரூற்றை நெருங்கியுள்ளீர்களோ அதனை உங்களது வாழ்வுக்காகவே உருவாக்கியுள்ளான் என்பது உண்மையாகும். ஆம்! தண்ணீர் அருந்துவதுதான் எஞ்சியுள்ளது. எனவே, இறைவனின் அருளிலிருந்து பலன்பெற விரும்பினால் இந்நீரூற்றிலிருந்து நீர் அருந்துங்கள். இறையருள் இல்லாமல் எதுவும் முடியாது. இந்த நீரூற்றிலிருந்து எவர் அருந்துவாரோ அவர் அழியமாட்டார் என்று நான் அறிவேன். ஏனெனில் இந்நீர் வாழ்வளிக்கிறது. அழிவிலிருந்து காப்பாற்றுகிறது. ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கிறது. இந்த நீரூற்றிலிருந்து அருந்துவதற்கு என்ன வழி? அது இதுவே. இறைவன் எந்த உண்மையில் உங்களை நிலைநாட்டியுள்ளானோ அதனை நிறைவேற்றுங்கள். முழுமையாக நிறைவேற்றுங்கள்.

மிகத் தெளிவாக அன்னார் கூறிவிட்டார்கள். நீங்கள் நல்லெண்ணம் கொண்டு என்னை ஏற்றுக் கொண்டு விட்டீர்கள். காலத்தின் இமாமை ஒப்புக்கொண்டு விட்டீர்கள். கடைசி காலத்தின் இமாம் – வர வேண்டிய இமாமின் முக்கியத்துவத்தை ஒப்புக்கொண்டு விட்டீர்கள். அவர் வந்து நம்மை முன்னவரோடு இணைக்கப்போகிறார் என்பதை ஏற்றுக் கொண்டு விட்டீர்கள். இக்காலத்தின் இபாதத்தும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். வெறுமனே புரிந்து கொள்வது மட்டும் போதுமானதன்று. அதிகமானோர் தம்மிடம் முழுமையான மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. இறைவன் மற்றும் அவனது படைப்பினங்களுக்குள்ள உரிமையை வழங்குவதில் சிலர் முழுமையாக கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கின்றனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் இம்மக்களைப் பற்றி அன்னார் கூறுகின்றார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் வாழ்ந்தவர்கள் அவர்களிடமிருந்து நேரடியாக அருளைப் பெறுபவர்களாக இருந்தனர். அவர்களைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள் என்றால், நாம் எந்த அளவுக்கு கவனம் செலுத்த வேண்டும்.

இந்த ஜுமுஆ ஒரு மகத்தான ஜுமுஆவாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டிருக்கும் நிலையில் இந்த ஜுமுஆ நமக்கு கிடைத்துள்ளது. அதன் உரிமையை வழங்க முயற்சித்து விரையுங்கள்.

வெறுமே வருடத்தில் ஒருமுறை ரமலானின் பக்கம் கவனம் செலுத்தினால் போதாது. மாறாக, இபாதத்துகள், இறைவனைப் பற்றிய நினைவு, படைப்பினங்களின் உரிமையை வழங்குதல் ஆகியவற்றிற்காக எப்போதும் தயாராக இருங்கள். ரமலானில் நன்மை செய்ய தவ்ஃபீக் கிடைத்துள்ளது. அந்த நன்மைகளை நமது வாழ்வின் கட்டாய பகுதியாக்குங்கள். சண்டை சச்சரவுகளில் இருந்து இந்நாட்களில் நாம் **இன்னி சாயிமுன்** – நான் நோன்பாளி என்று கூறி விலகியிருக்கும்போது ரமலானுக்கு பிறகு கூட அதிலிருந்து விலகியே இருக்க வேண்டும்.

தொழுகையை ரமலானில் நாம் முறையாக தொழுதோம் எனில் அதனை நமது வாழ்வின் நிரந்தர பகுதியாக்க வேண்டும். நான் கூறிய ஹதீஸிலிருந்து தெரிவதுபோன்று மிகச் சிறந்த நாள் ஜுமுஆவின் நாளாகும். மிகச் சிறந்த மாதம் ரமலான் மாதமாகும். மிகச் சிறந்த இரவு லைலத்துல் கத்ர் இரவாகும். இன்று இந்த நாளிலிருந்து பயனடைந்தவாறு பின்வரும் துஆவை நிச்சயம் நமது துஆவுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும். **நமக்குள் அல்லாஹ் தூய மாற்றத்தை ஏற்படுத்தி, வரக்கூடிய ஜுமுஆக்களிலிருந்தும் பயன்பெறும் வாய்ப்பை வழங்குவானாக.**

பிறகு மிகச் சிறந்த மாதத்தில் கடந்து கொண்டிருக்கிறோம். அதில் சில நாட்களே எஞ்சியுள்ளன. நமது துஆவில் நாம் இதனையும் இணைத்துக் கொள்ள வேண்டும். இந்த நாட்களின் பரக்கத்துகள் எமக்கு மிக நீண்டதாக்கி வரும் ரமலான் வரை அருள் தரத்தக்கதாக ஆக்குவானாக. பிறகு வரும் ரமலானில் இன்னும் பல முன்னேற்றங்களைப் பெற வேண்டும். அல்லாஹ்வுடைய நெருக்கம், திருப்தியை இன்னும் அதிகம் பெறக்கூடியவர்களாவோமாக. பிறகு நன்மையினை பெறும் முடிவில்லாத முயற்சி நம்முடன் வாழ்நாள் முழுக்க வந்து கொண்டேயிருக்கும். ஏன்? மரணத்திற்குப் பிறகுகூட இறைவன் தனது ரஹ்மத்தின் போர்வையால் நம்மை போர்த்துவான். பிறகு மிகச்சிறந்த இரவை பற்றி வருகிறது. அது லைலத்துல் கத்ர் ஆகும். இதுபற்றி அறிவிப்புகளில் வருகிறது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதனை கடைசி பத்து நாட்களில் தேடுங்கள். இந்த அடிப்படையிலும் நாம் இறுதிப் பத்து நாட்களில் கடந்து கொண்டிருக்கிறோம். பிறகு அறிவிப்புகளில் பார்க்கும்போது தெரிய வருகிறது. இந்த அடிப்படையில் துஆவில் கவனம் செலுத்த வேண்டும். இது கபூலிய்யத்தே துஆவின் இரவாகும்.

சுருக்கமாக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வார்த்தையில் லைலத்துல் கத்ர் பற்றி கூறுகிறேன்.

திருக்குர்ஆனில் லைலத்துல் கத்ர் பற்றி கூறப்பட்டுள்ளது. அதைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

ஒரு லைலத்துல் கத்ர் இரவின் பிற்பகுதியில் காணப்படுகிறது. அல்லாஹ் அப்போது தனது தோற்றத்தை வழங்குகிறான். கையை நீட்டுகிறான். துஆ செய்பவர், பாவமன்னிப்புத் தேடுபவர் எவரும் இருக்கிறாரா? நான் அவற்றை ஏற்றுக் கொள்வதற்கு என்று கேட்கிறான். மேலும் அதற்கு இன்னொரு பொருளும் உண்டு. அது என்னவெனில், நாம் இந்த குர்ஆனை ஓர் இரவில் இறக்கினோம். முழு உலகிலும் இருள் நிறைந்து இருந்தது. தகுதிவாய்ந்த ஒரு சீர்திருத்தவாதியை தேடிக் கொண்டிருந்த அத்தகைய ஓர் இரவாகும்.

பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தோன்றுவதும் குர்ஆன் இறங்குவதும் அவ்விரவில் மிகவும் தேவையாக இருந்தது. அக்காலமோ கியாமத் வரை நீடித்திருக்கக் கூடிய காலமாக இருந்தது. இன்னா அன்ஸல்னாஹு ஃபீ லைலத்துல் கத்ர் என்ற வசனம் அதற்கு ஆதாரமாகும். அது உண்மையான தேவையின் காலமாகும். இது ஒரு நீண்ட கருத்தாகும். இப்போது துஆ, இஸ்திக்ஃபார் பற்றி நான் கூற விரும்புகிறேன்.

அல்லாஹ் துஆ, இஸ்திக்ஃபார் – ஐ ஒப்புக் கொள்வதற்காக கையை நீட்டுகிறான் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள். எனவே அந்த இரவை நாம் எப்போதும் தேடிக்கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் நாம் அருளைப் பெறுவோம். உண்மையில் ஜுமுஆ நாள், ரமலான் மாதம், லைலத்துல் கத்ர் எல்லாமே நம்மிடத்தில் ஓர் புரட்சியை ஏற்படுத்தும்போதுதான் பயன் அளிக்கும். நாம் நமது படைப்பின் நோக்கத்தை நிறைவேற்றும்போது பயனளிக்கும். நமது இபாதத்துகள் நிரந்தரமானவையாக வேண்டும். பிறகு அல்லாஹ்வின் நினைவு ஜுமுஆவின் நாளில் மட்டும் இருக்காது. நாம் நிரந்தரமாக நமது நாவுகளை இறை நினைவில் நனைப்பவர்களாகி விடுவோம். இந்த வசனத்தில் அல்லாஹ் இது பற்றியே கவனமூட்டியுள்ளான்.

ஜுமுஆ தொழுது விட்டால் பிறகு உங்கள் வேலைகளில் கவனம் செலுத்துங்கள். நினைவில் கொள்ளுங்கள். பிறகு நாம் அடுத்த ஜுமுஆ வரை உலக அழுக்குகளில் மூழ்கி இருக்கலாம் என்று கருதி விடாதீர்கள். அவ்வாறன்று. உமது வேலைகளுக்கு நடுவிலும் இறைவனைப் பற்றி நினைவு உங்களுக்கு வர வேண்டும். உங்கள் நாவு திக்ர் செய்ய வேண்டும். பகலின் ஐந்து வேளை தொழுகை உங்கள் கவனத்தில் இருக்க வேண்டும். எனவேதான் இறைவன் கூறினான்.

**வப்தகூ மின் பழ்லில்லாஹி வஸ்குருல்லாஹ கஸீரன் லஅல்லகும் துஃபிலிஹூன்** – நீங்கள் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு உங்கள் வேலைகளில் மூழ்கி இறை அருளைத் தேடுங்கள். அதாவது, உலக வேலைகளும்கூட அனுமதிக்கப்பட்ட வேலையாக இருக்க வேண்டும். எந்த அனுமதியற்ற பணியின் மூலமும் இறை அருளை ஈர்க்க இயலாது. தொழுகைகளை வெளிப்படையாக நிறைவேற்றி விட்டு பிறகு வியாபாரத்தில் ஏமாற்றுத்தனம் செய்பவர்களாக இருக்கக் கூடாது. உங்கள் உள்ளத்தை தூய்மையாக வைக்க திக்ரே இலாஹி செய்வது அவசியமாகும். வெறும் வெளிப்படையான தோற்றம் திக்ரே இலாஹி ஆகாது. மாறாக உள்ளம், மூளை இரண்டும் இறைவனது அருள்களை நினைவுகூர்ந்து தக்வா உருவாக்கத்தக்க அளவுக்கு இறைவனை நினைவு கூறவேண்டும். உங்கள் அசல் வெற்றி இதில்தான் இருக்கிறது என்று அல்லாஹ் கூறுகிறான். இறைவனை திக்ர் செய்வது எப்படி என்பது பற்றியும் திருக்குர்ஆனில் பல இடங்களில் வருகிறது.

சூரா ஆலிஇம்ரானில் வானங்கள், பூமியின் படைப்பு, இரவு பகல் மாற்றம் பற்றி இறைவன் கூறுகிறான். அதன்பிறகு அல்லாஹ் கூறுகிறான்.

**அல்லஸீன யஸ்குருனல்லாஹ கியாமன் வகூவூதன் வஅலா ஜுனூபிஹிம் வ யதஃபக்கருன ஃபீ கல்கிஸ் ஸமாவாத்தி வல் அர்ளி. ரப்பனா மா கலக்த ஹாதா பாதிலா. சுப்ஹானக்க ஃபகினா அதாபன்னார்** – நின்று கொண்டும், உட்கார்ந்து கொண்டும், படுத்துக் கொண்டும் அம்மக்கள் இறைவனை நினைவு கூறுகின்றனர். பிறகு தன்னிச்சையாக கூறுகின்றனர். என் இறைவா இவற்றை நீ வீணாக

படைக்கவில்லை. நீ தூயவன். எம்மை நெருப்பின் தண்டனையில் இருந்து பாதுகாப்பாயாக. எனவே இறைவன் எப்போதும் நினைவில் இருக்கத்தக்க அளவில் திக்ரே இலாஹி செய்ய வேண்டும். இறைவன் வானம், பூமியின் படைப்பு பற்றி கவனமூட்டிவிட்டு கூறுகிறான். இதனைப் பற்றி ஆய்வு செய்பவர்கள் கூறுவர். **சுப்ஹானக்க ஃபகினா அதாபன்னார்** – நீ எம்மை நெருப்பின் தண்டனையிலிருந்து காப்பாற்றுவாயாக. ஏனெனில் எதெல்லாம் வானம், பூமியில் உள்ளதோ அவை அனைத்தும் இறைவனின் படைப்பினங்களேயாகும். நமது வாழ்வின் எல்லா ஆதாரங்களும் அசலில் அல்லாஹ் உருவாக்கியவைதான். வானங்கள், பூமி அவற்றிற்கு இடையில் உள்ள அனைத்தும் அல்லாஹ்வின் படைப்பினங்களாகும். அனைத்தும் இறைவனுடையவைதான். இறை அருளால் அவை கிடைக்கின்றன. கிடைக்கும். பிறகு இறைவனை விட்டு மனிதன் எப்படி செல்ல முடியும்?

தொழில்துறைகளை இறைவனுக்கு இணையாக்கினால் இறைவன் மன்னிக்க மாட்டான். பிறகு அவை நெருப்பிற்கு கொண்டு செல்பவையாகும். மனிதன் அதற்காகத்தான் துஆ செய்கிறான். அல்லாஹ்வே எம்மை நெருப்பின் தண்டனையில் இருந்து பாதுகாத்தருள்வாயாக.

ஒவ்வொரு வினாடியும் இவைனே நமக்கு எல்லா வகையான அருளும் பொழிவானாக. அல்லாஹ்வே எனது வாழ்வில் உனக்கு எதிராக எதுவும் இருக்கக் கூடாது என்று எப்போதும் மனிதன் துஆ செய்து வர வேண்டும். எப்போதும் துஆ செய்ய வேண்டும். அல்லாஹ்வே எங்களை எப்போதும் உனக்கு இபாதத் செய்பவர்களாகவும் திக்ர் செய்பவர்களாகவும் ஆக்குவாயாக. அதன் மூலம் நாங்கள் உலக இழிவிலிருந்தும் தப்பிக்க வேண்டும். மறுமையின் தண்டனையிலிருந்தும் தப்பிக்க வேண்டும். எனவே, இறைவன் நமக்கு கூறுகிறான். ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நமது அருளைத் தேடுங்கள். திக்ரே இலாஹி செய்து கொண்டிருங்கள். இது உங்கள் எல்லா நன்மை தீமையும் என் கையில்தான் உள்ளது என்ற நினைவூட்டலாகும். எனவே, நீங்கள் நம்மோடு தொடர்பு கொண்டு ஆன்மீக பயனும் பெறுகிறீர்கள். உலக பயனும் பெறுகிறீர்கள் என்று இறைவன் கூறும் ஒரு நினைவூட்டல் ஆகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். இந்த வசனத்தில் அல்லாஹ் இன்னொரு அம்சமாக குறிப்பிட்டிருப்பதாவது, உலுல் அல்பாப் – அறிவாளிகள் அறிவு நிரம்பப் பெற்றவர்கள். உட்கார்ந்தவாறும், நின்றவாறும், படுத்தவாறும் இறைவனை நினைவு கூர்கின்றனர். அறிவு என்பது எந்த முயற்சியுமின்றி வெறுமே கிடைத்து விடும் என்று கருதாதீர்கள். உண்மையான அறிவு இறைவன் பக்கம் திரும்பாமல் கிடைக்கவே செய்யாது. எனவேதான் மூஃமினின் அறிவுடைமைக்கு அஞ்சுங்கள் என்று கூறப்பட்டது.

உண்மையான அறிவு தக்வா இல்லாமல் கிடைக்காது. எவரது மனதிலாவது நமது வியாபாரம், தொழில் நமது அறிவினால் நடத்திக் கொண்டு போகிறோம் என்ற எண்ணம் இருக்கும் எனில் அது தவறாகும். ஒரு மனிதன் முயற்சி செய்கிறான். அல்லாஹ் இயற்றிய சட்டத்திற்கேற்ப அதற்குரிய பலனை வழங்குகிறான் என்பது சரிதான். ஓர் உலகியல்வாதி இறைவனை நம்புவதில்லை. அவர் வியாபாரத்திலிருந்து தற்காலிக பயனடைகிறார். ஆனால் ஓர் அஹ்மதி நினைவில் கொள்ள வேண்டும். காலத்தின் இமாமை நாம் ஈமான் கொள்ள வேண்டும். அப்போது நமது ஒவ்வொரு பணியிலும் பரக்கத் ஏற்படும். முன்னேற்றம் ஏற்படும். இறைவனின் நினைவும் இருக்கும். தக்வாவும் இருக்கும். இறைவனால் அனுப்பப்பட்ட வரை ஒப்புக் கொண்ட பிறகு இருவகை செயல்கள் இருக்க முடியாது. நாம் சஹாபாக்கள் நிலைநாட்டிய முன்மாதிரியை கைகொள்ள முயற்சி செய்ய வேண்டும். அவர்கள் வியாபாரம் செய்து அல்லாஹ்வுடைய திக்ரை மறக்கவில்லை. பல சஹாபாக்கள் சில அற்ப காசுகளைக் கொண்டு கோடிகளைப் பெற்றனர். எனவே ஈமான், அறிவுடைமை, இறையருள் அவர்களுக்கு பயன் தந்தது. அவர்களிடம் ஈமானும் அறிவுடைமையும் இருந்தது. இறையருள் அவர்களுக்கு நிழலிட்டது. அந்த உயர் நிலையை அடைந்தனர். எனவே எப்போதும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். இறையருளை ஈர்க்க முயற்சி செய்ய வேண்டும். அதன் மூலம் எப்போதும் அருள்பெற்றுக் கொண்டிருப்பதற்காக நமது இபாதத்துகளின் தகுதியை உயர்த்த முயற்சி செய்ய வேண்டும்.

இக்காலத்தில் உள்ள உங்கள் மனம் கவர்ந்த வியாபாரங்கள் உங்கள் உள்ளத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தலாம். எனவேதான் இறைவன் கவனமூட்டியுள்ளான். **கைருர் ராஸிகீன்** – உணவளிப்பவர்களில் சிறந்தவன் அல்லாஹ்வாகும். ஒவ்வொரு அருளும் அவன் புறமிருந்தே கிடைக்கின்றன. தொழில் லாபங்கள், சரியான முடிவெடுக்கும் திறன் எல்லாம் இறைவனிடமிருந்தே கிடைக்கின்றன. பல தொழில் வல்லுநர்கள் சரியான முடிவு எடுக்காததன் காரணத்தால் அல்லது பிற காரணங்களல் திவாலாகி உள்ளனர். இக்கால சமூகத்தின் நிலையை பாருங்கள். பெரிய பெரிய பேங்குகள் கூட திவாவாகி விடுகின்றன. எனவே இறைவனுடைய திக்ருக்கு எதிராக மற்ற அனைத்தையும் ஒன்றுமற்றதாக கருதுங்கள். அல்லாஹ்வுடைய அருள் கொண்டே எல்லாம் கிடைக்கின்றன. அல்லாஹ் நம்மில் ஒவ்வொருவருக்கும் தவ்ஃபீக் தருவானாக. நாம் தக்வாவில் நடந்து, இந்த ஜுமுஆ மட்டுமின்றி ஒவ்வொரு ஜுமுஆவையும் கவனத்துடன் நிறைவேற்றுவோமாக. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஒருவர் கவனமற்றவராக மூன்று ஜுமுஆவை விட்டு விட்டால் அவருடைய உள்ளத்தில் அல்லாஹ் முத்திரை இட்டு விடுகிறான்.

அல்லாஹ் நம்மை ஷய்த்தானின் தாக்குதலில் இருந்து பாதுகாப்பானாக. எப்போதும் தனது பாதுகாப்பில் வைப்பானாக. ஒருபோதும் இறை அருளில் இருந்து விலகாமல் இருப்போமாக. ஆமீன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 26.09.2008**

Translated by : **Muallim M. Nisamudeen Sb.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**